20th November 1963]

திட்டமும் இப்போதைய நிலையில் இல்லாததால் இந்தக் கூட்டுறவு சங்கத்தை நமது மாதவரம் ப்ராஜெக்டுடன் சேர்க்க அரசாங்கம் சிந்திக்குமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இது மாதவரத்தைப் பற்றித்தான். மாதவரத்தைப் பற்றித்தான் கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறேன் . . . .

**திரு. கே. டி. கோசல்ராம்:** நான் ஐயனாவரம் சொஸைடியைப் பற்றி என்று நினைத்துவிட்டேன்.

சேலம் கூட்டுறவு மத்திய பாங்க்

* 344 கேள்வி—திரு. ம. கமலநாதன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியில் 44-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி சேலத்தில் இருக்கும் சேலம் மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கியை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் இப்போது எந்த நிலையிலுள்ளது?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இந்த திட்டத்தை சர்க்கார் தற்காலிகமாக ஒத்திப் போட்டிருக்கிறார்கள்.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** ஒத்திப் போட்ட காரணத்தை அறியலாமா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** ஜில்லாவை இரண்டாகப் பிரித்ததற்குப் பிறகுதான் இந்த யோசனை.

*Houses for Harijans*

* 345 *Q*.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to give up the construction of houses for Harijans and other Scheduled Communities; and

(*b*) if so, what are the alternative schemes for providing houses for them?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No.

(*b*) Does not arise. It may however be stated that the Director of Harijan Welfare submitted proposals for integrating the Rural Housing Scheme of the Co-operative Department with the Harijan Housing Scheme with a view to enable the Harijan to join the Housing Co-operative Societies and to build fairly durable houses at a cost of Rs. 2,500 each. It was decided to take up this question after the present National Emergency is over.

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை. எனினும் ஹரிஜனங்கள் வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்து வீடு ஒன்று ரூ. 2,500 செலவில் நல்ல வீடுகளைக் கட்டிக்கொள்ள வசதி செய்யும்